

# பட்டதாரிகளை வரவேற்கும் பட்டாபிராம்!

## தமிழ்நாட்டின் 3-வது டைடல் பூங்கா!

**திராவிட மாடல் அரசு 100**

ர.பிரகாசு

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

- தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 டைடல் பூங்காக்களும் தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயே திறக்கப்பட்டன.
- இந்தியாவில் மென்பொருள் ஏற்றுமதி சேவையில், முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.
- தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறை பணியிடங்களில் 80% தமிழர்களே உள்ளனர்.



1965-ஆம் ஆண்டு 'கணினி' என்ற ஒரு கருவி (ஐ.பி.எம்-1620) முதன்முதலாக தமிழ்நாட்டிற்குள் நுழைந்தபோது, மாடிப்படி ஏற இயலாத நிலையில் இருந்தாலும், 'நாற்காலியில் அமரவைத்துத் தூக்கிச் சென்றாவது எனக்கு அந்தக் கருவியைக் காட்டுங்கள்' என ஆச்சரி யத்தோடு அதனைச் சோதித்துப் பார்த்து ரசித்தவர் தந்தை பெரியார். உலக நவீனங்களை தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் சாத்தியப் படுத்தப்பட வேண்டுமென்று விரும்பியவர் பேரறிஞர் அண்ணா.

அவர்கள் வழியில் வந்த முத்தமிழறிஞர் கலைஞர் எதிர்வரும் உலகை ஆளப்போவது ஆயுதங்கள் அல்ல, அறிவுதான், அந்த அறிவின் அடிப்படை கணினிதான் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். அதனால்தான் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக 1997-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கான தகவல் தொழில்நுட்பக் கொள்கையை வெளியிட்டார்.

இப்போது மெய்நிகர் உலகிற்குள் நம்மை அழைத்துச் செல்லும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை, உலகம் ஆச்சரியத்தோடு உற்றுநோக்குவதைப் போல, அன்றைக்கு மென்பொருளைக் கண்டு வியந்து கொண்டிருந்தது. அப்படியொரு காலகட்டத்தில்தான் சென்னை, தரமணியில் **'டைடல் மென்பொருள் பூங்கா'** அமைக்கப்படும் என கலைஞர், 1998-99 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தார்.

2000-ஆம் ஆண்டில் தரமணி **'டைடல் பார்க்'** உருவானது. 2006-இல் மீண்டும் முதலமைச்சரான கலைஞர் கோவை டைடல் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். 2010-இல் செயல்பாட்டுக்கு வந்தது. அடுத்த 10 ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மென்பொருள் சேவையில், குறிப்பிடத்தக்க முன்னெடுப்புகள் இல்லாமல் போயின. இந்தியாவின் **'சிலிக்கான் வேலி'**யாக உருவெடுக்கும் அளவுக்கு தகவல்தொழில் நுட்பத்துறையில் அபரிமிதமான வளர்ச்சி கண்டது பெங்களூரு.

### 3-வது டைடல் பூங்கா!

மீண்டும் 2021-இல் கழக அரசு அமைந்ததும் தகவல் தொழில்நுட்பத் துறைக்குப் புத்துயிர் ஊட்டும் புதுத் திட்டங்களை முன்னெடுத்தார், திராவிட மாடல் நாயகர். உற்பத்தித் துறையில் மட்டுமல்ல, சேவைத்துறையிலும் தமிழ்நாடு தழைத்தோங்க வேண்டும். அப்போதுதான் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் (ஒரு லட்சம் கோடி) டாலர் பொருளாதார இலக்கை எட்ட முடியும். மற்றொருபக்கம், சென்னை- கோவை ஆகிய பெருநகரங்களுக்கு மட்டுமே பட்டதாரிகள் படையெடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையையும் மாற்ற வேண்டும். 'அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி' என்பதுதான் திராவிட மாடல் இலக்கணமும்கூட. அதற்காகவே, விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் 'மினி டைடல் பூங்காக்கள்' அமைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

அந்தவகையில், திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் அமைக்கப்பட்டுள்ள, தமிழ்நாட்டின் மூன்றாவது 'டைடல் பூங்கா' ஆண்டுதோறும் லட்சக்கணக்கில் படித்து வெளியேறும் மென்பொருள் பொறியாளர்களுக்கு புதியதொரு வரப்பிரசாதம். 11.41 ஏக்கரில், 330 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட டைடல் பூங்காவை இந்த ஆண்டு நவம்பர் 22-ஆம் தேதி திறந்துவைத்தார் முதலமைச்சர்.

**இந்தியாவின் சிலிக்கான் வேலியாக 'தமிழ்நாட்டை' மாற்றுவதற்கான விதைகளை ஊன்றிக் கொண்டிருக்கிறது 'திராவிட மாடல் அரசு'. அதில் வலுவான விருட்சமாக வளர்ந்து நிற்கப்போகிறது, 'பட்டாபிராம் டைடல் பூங்கா'.**

### டைடல் பூங்காவின் சிறப்புகள்!

5.57 லட்சம் சதுர அடி பரப்பளவில், 21 தளங்களுடன் வானுயர்ந்து நிற்கும் இந்தக் கட்டடத்தில், பல அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்குதடையின்றி செயல்பட தேவையான நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு, மின் இயக்கி மற்றும் மின்தூக்கி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பேரிடர்களைத் தாங்கும் விதமான கட்டட மேலாண்மை வசதிகள், தீ விபத்தை எதிர்கொள்ளும் வகையிலான சிறப்புப் பாதுகாப்பு வசதிகள், சுகாதார வசதிகள், 24 மணி நேரமும் கண்காணிக்கும் சி.சி.டி.வி. கேமரா வசதிகள் போன்றவை பட்டாபிராம் டைடல் பூங்காவை சர்வதேச தரத்திற்கு உயர்த்துகின்றன.

ஒரே நேரத்தில் 927 கார்கள் மற்றும் 2,280 இருசக்கர வாகனங்களை நிறுத்தும் அளவுக்கு பிரமாண்ட பார்க்கிங் வசதியும் இங்கு உள்ளது. 'அரங்கம்', 'உணவகம்' மற்றும் 'உடற்பயிற்சிக் கூடம்', 'தியான அறை', 'மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் வசதிகள்', 'மருத்துவ மையம்' போன்றவையும் இருக்கின்றன. அதுமட்டுமின்றி, கட்டடத்தின் 13, 16-வது மாடிகளுக்கு இடையே கண்ணைக் கவரும் விதமாக தொங்கும் தோட்டம் அமைக்கப் பட்டுள்ளது. மாடித்தோட்டமும் உள்ளது. பசுமைக் கட்டட வழிமுறைகளின்படி திராவிட மாடல் அரசின் பிரமாண்ட கட்டமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்துள்ள, இந்த 'பட்டாபிராம் டைடல் பூங்கா', அடுத்த சில ஆண்டுகளில் 6,000 பட்டதாரிகளின் வேலைவாய்ப்பைப் பூர்த்தி செய்ய காத்திருக்கின்றது.

### ஆர்வம் காட்டும் நிறுவனங்கள்!

தென்சென்னையும், அதனையொட்டிய புறநகர்ப் பகுதிகளுமே தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தாய்மடி ஆகிவிட்ட நிலையில், அதற்கு மாறாக, திருவள்ளூரில் இந்த டைடல் பூங்கா அமைக்கப்பட்டிருப்பதும் புதிய மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது. வட மாவட்ட இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு வழிகோலும் விதமாக அமைந்திருக்கிறது இந்த பட்டாபிராம் டைடல் பூங்கா. இப்பூங்கா திறக்கப்பட்ட நாளிலேயே, Webberax Solutions Pvt. Ltd., Dotnix Technologies LLP என்ற இரண்டு நிறுவனங்களுக்குத் தள ஒதுக்கீடு செய்தார் முதலமைச்சர். அடுத்து ஒரு மாதத்திற்குள்ளேயே Dot Coworking Operator, Gemcaps Health care என்ற மேலும் இரண்டு நிறுவனங்களுக்குத் தளங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. மேற்கொண்டு 3 நிறுவனங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.

இந்தியாவின் சிலிக்கான் வேலியாக 'தமிழ்நாட்டை' மாற்றுவதற்கான விதைகளை ஊன்றிக் கொண்டிருக்கிறது 'திராவிட மாடல் அரசு'. அதில் வலுவான விருட்சமாக வளர்ந்து நிற்கப்போகிறது, 'பட்டாபிராம் டைடல் பூங்கா'.

...சாதனை தொடரும்

## யார் இந்த சாரங்கி?



சாரங்கி

நாடாளுமன்றத்தில் புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த அமித் ஷாவை கண்டித்து, இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, ராகுல் காந்தி தன்னைத் தள்ளிவிட்டுவிட்டார் என மருத்துவமனையில் சேர்ந்தார் ஒடிசாவைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.பி. சாரங்கி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதல் நாள், சிறிய கட்டுடன் காணப்பட்ட இவர், மறுநாள் முழுத் தலையையும் மறைக்கும் அளவுக்கு மிகப்பெரிய கட்டுடன் இருந்த புகைப்படங்கள் வெளியாகின. 'காயம் வளர்ந்ததா அல்லது கட்டு வளர்ந்ததா' என ஊடகங்கள் கேலி செய்யும் அளவுக்கு இருந்தது, இச்சம்பவம்.

உண்மையில், அந்த சாரங்கி யார் என்பது குறித்து அரசியல் விமர்சகர் சூர்யா சேவியர் எழுதிய பதிவு சமூக வலைத்தளங்களில் பெரும் கவனம் ஈர்த்துள்ளது. "1999-இல் ஆஸ்திரேலிய கிறிஸ்தவ பாதிரியார் 'கிரஹாம் ஸ்டெயின்ஸ்' மற்றும் அவரது இரண்டு குழந்தைகளும் ஒடிசாவில் உள்ள மனோகர்பூர் - கியோஞ்சர் கிராமத்தில், பஜ்ரங் தள் கும்பலால், அவர்களது ஸ்டேஷன் வேகனில் தூங்கிக் கொண்டிருந்தபோது எரித்துக் கொல்லப்பட்டனர்.

அப்போது பஜ்ரங் தளத்தின் தலைவராக பிரதாப் சாரங்கி இருந்தார். விசாரணைக்குப் பிறகு, பஜ்ரங் தளத்துடன் தொடர்பு கொண்டிருந்த தாரா சிங் என்ற நபரும், மேலும் 12 பேரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். அதில் இந்த சாரங்கியும் ஒருவர். ஒடிசா உயர்நீதிமன்றம் 2 ஆண்டுகளுக்குப் பிறகு தாராசிங்கிற்கு மரண தண்டனையைக் குறைத்தது. அதன்பிறகு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லை என்றுகூறி, 11 பேரும் விடுவிக்கப்பட்டனர். கடந்த முறை ஒன்றிய இணை அமைச்சராகவும் இருந்தார்" என்று பதிவிட்டுள்ளார்.

2002-ஆம் ஆண்டு வலதுசாரிகளால் ஒடிசா சட்டமன்றம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, அரசுச் சொத்துக்கள் சேதப்படுத்தபட்ட வழக்கிலும் கைது செய்யப்பட்டவர் இந்த சாரங்கி.

## ஃப்ளாஷ்பேக்



### இனமானப் பேராசிரியரைச் சந்தித்தேன்!



சரத் குமார்

2016-ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக, அன்றைய புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பெரியண்ணன் அரசு அவர்கள் அறிவிக்கப்பட்டார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்க பேராசிரியர் க.அன்பழகன் அய்யா அவர்கள் வருகை தந்திருந்தார். புதுக்கோட்டை சின்னப்பா பூங்காவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிவிட்டு, தங்கும் விடுதிக்கு வருகை தந்த இனமானப் பேராசிரியர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்படியான தருணத்தில் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**- சரத் குமார், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### மாணவர்களை ஈர்த்த பேரறிஞர்!

27.02.1943 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் 'ஆற்றோரம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். அண்ணாவின் பேச்சைக் கேட்டு, ஈர்க்கப்பட்ட பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் மறுநாள் ஆங்கிலத்திலும் உரையாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தனர். 'தி வேர்ல்டு ஒல்டு அண்ட் நியூ' என்னும் தலைப்பில் மறுநாள் ஆங்கிலத்திலும் உரையாற்றினார், அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**698**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131